**செய்தி வெளியீடு எண்:118** **நாள்:13.02.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (13.2.2021) தலைமைச் செயலகத்தில், தொல்லியல் துறை சார்பில் சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், கொந்தகை மற்றும் அகரம் ஆகிய இடங்களில் ஏழாம் கட்டமாக தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் மேற்கொள்ளவுள்ள தொல்லியல் அகழாய்வுப் பணிகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், சுற்றுலாத் துறை, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் கலை பண்பாட்டுத் துறை சார்பில் 8 கோடியே 58 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளையும் திறந்து வைத்தார்கள்.

பழந்தமிழரின் பெருமையை உலக அரங்கில் நிலைநிறுத்தும் பணியை தமிழ்நாடு அரசு தொடர்ந்து தனிக்கவனம் செலுத்தி செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழடி கிராமத்தில் அமைந்துள்ள பள்ளிச்சந்தை திடலில் 110 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தொல்லியல் மேட்டில் இந்திய தொல்லியல் துறை 2014–2015, 2015–2016, 2016–2017 ஆகிய மூன்று ஆண்டுகளில் அகழாய்வுகள் மேற்கொண்டு, 7,818 தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு கீழடியில் சங்க கால (வரலாற்றுத் தொடக்க காலம்) மக்கள் வாழ்ந்ததற்கானச் சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டன.

இச்சான்றுகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கீழடியில் அகழாய்வினை மேற்கொள்ள மத்தியத் தொல்லியல் ஆலோசனைக் குழுவின் அனுமதியினைப் பெற்றது. தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை 2017–2018 ஆம் ஆண்டு நான்காம் கட்ட அகழாய்வினை மேற்கொண்டது. இந்த அகழாய்வில் 5,820 தொல்பொருட்களும், பழந்தமிழரின் கட்டுமானப் பகுதிகளும் வெளிப்படுத்தப்பட்டன. இதனை தொடர்ந்து 2018–2019 ஆம் ஆண்டு ஐந்தாம் கட்ட அகழாய்வில் பல்வேறு வடிவிலான செங்கல் கட்டுமானங்கள், செங்கல்லிலான திறந்த நிலையிலான வாய்க்கால், மூடிய நிலையிலுள்ள வடிகால், சுருள் வடிவிலான சுடுமண் குழாய் போன்ற வடிகால் அமைப்புகள் கண்டறியப்பட்டன. ஏறத்தாழ 900 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. 2019–2020ஆம் ஆண்டு ஆறாம் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப் பணிகளில் சுமார் 2,672 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், கொந்தகை மற்றும் அகரம் ஆகிய இடங்களில் ஏழாம் கட்டமாக தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் மேற்கொள்ளவுள்ள தொல்லியல் அகழாய்வுப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல்லில், 1 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா விருந்தினர் இல்லம் மற்றும் மேம்படுத்தப்பட்ட தகவல் மையம்; கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியில் 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட பாரம்பரிய சுற்றுலா தங்கும் விடுதி;

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தோவாளை, அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் 10,666 சதுர அடி பரப்பளவில் 2 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம் மற்றும் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் பக்தர்களின் குடிநீர் வசதிக்காக திருக்கோயில் நிதியிலிருந்து 3 கோடியே 30 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள குடிநீர் திட்டம்;

கலை பண்பாட்டுத் துறை சார்பில், தூத்துக்குடி மாவட்டம், மாப்பிள்ளையூரணி கிராமத்தில், 424.44 சதுர மீட்டர் பரப்பளவில், குரலிசை, வயலின், மிருதங்கம், தவில், நாதஸ்வரம், பரதநாட்டியம், தேவாரம் ஆகிய பாடப் பிரிவுகளுக்கான தனித்தனி அறைகள், அலுவலக அறை, தலைமையாசிரியர் அறை, ஆசிரியர்கள் அறை, இருப்பு அறை, மாணவர்கள், மாணவிகள் மற்றும் மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கான தனித்தனி கழிவறைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப்பள்ளிக் கட்டடம்;

என மொத்தம் 8 கோடியே 58 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு இல்லங்களுக்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ள 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மிதி படகுகள் மற்றும் துடுப்புப் படகுகள், 1 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான விசைப் படகுகள் மற்றும் விரைவுப் படகுகள், 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வாட்டர் ஸ்கூட்டர் மற்றும் மோட்டார்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பில் 1 கோடியே 37 லட்சம் ரூபாய் செலவில், பண்பாட்டு சுற்று, பாரம்பரிய சுற்று, ஆன்மிக சுற்று, சுற்றுச்சூழல் சுற்று, கடற்கரைச் சுற்று, கிராமிய சுற்று, உடல்நலம் பேணும் சுற்றுலா, பல்வேறு தமிழக உணவு வகைகள், கலை மற்றும் கைவினைப் பொருட்கள், சுற்றுலா தலங்களின் உயர் தெளிவுத்திறன் கொண்ட புகைப்படங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி 60 நிமிட சுற்றுலா விளம்பர குறும்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இக்குறும்படங்கள், இந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனி, சீனம், ஸ்பானிஷ், ஜப்பான் ஆகிய வெளிநாட்டு மொழிகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இச்சுற்றுலா விளம்பர குறும்படங்கள் அடங்கிய குறுந்தகட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வெளியிட்டார்கள்.

தமிழகத்தின் சுற்றுலா தலங்களை பிரபலப்படுத்தும் விதமாக, யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்கள், தமிழகத்தின் கோவில்கள், சுற்றுச்சூழல் தலங்கள் மற்றும் பாரம்பரிய தலங்கள் குறித்து 1 கோடியே 27 லட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட காலப்பேழை புத்தகங்களை (Coffee Table Books) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வெளியிட்டார்கள். இப்புத்தகங்கள் வெளிநாடுகளில் அமைந்துள்ள இந்திய தூதரகங்களுக்கு வழங்கப்படும். இதன்மூலம், அங்கு வருகை புரிபவர்களுக்கு தமிழக சுற்றுலா தலங்களை பற்றி அறிந்து கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் குறித்த விவரங்கள், நடைபெறும் விழாக்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் தங்கும் விடுதிகள், படகு குழாம்கள், சுற்றுலா பயண திட்டங்களின் விவரங்கள் ஆகியவற்றை பற்றி அறிந்து கொள்ளவும், சுற்றுலா முன்பதிவு செய்யவும் 1 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள Tamilnadu Tourism என்ற

கைப்பேசி செயலியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

மேலும், உதவி சுற்றுலா அலுவலர் நிலை–II பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 20 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 2019–2020ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையான 3 கோடியே 12 லட்சத்து 82 ஆயிரத்து 125 ரூபாய்க்கான காசோலையை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்படும், முட்டுக்காடு, முதலியார்குப்பம், ஊட்டி, பைக்காரா, ஏற்காடு, பிச்சாவரம் மற்றும் கொடைக்கானல் ஆகிய ஏழு படகு இல்லங்களில் நடைபெறும் படகு சவாரி, நீர்சாகச மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களில், பயணிப்பவர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டு, ஜனவரி 2021–ல் மும்பையிலுள்ள IR Class Systems and Solutions Private Ltd., நிறுவனத்தால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கப்பட்ட பாதுகாப்புதிறன் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு பயிற்சி அளிக்கப்பட்டதற்கான ISO 21101 : 2014 தரச் சான்றிதழை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன் அவர்கள் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

புதுடெல்லி, தேசிய சிறுவர் மன்றத்தால் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் தேசிய பாலஸ்ரீ விருதிற்கான குரலிசை, நடனம், கருவியிசை / தாள வாத்தியம், நாடகம் / பொம்மலாட்டம், ஓவியம், கைவினை, சிற்பம், கணினி வரைகலை, அறிவியலில் புதிய மாதிரிகள் உருவாக்கம், அறிவியலில் திட்டங்கள் செயல்படுத்துதல், அறிவியல் புதிர்களுக்கு தீர்வு காணுதல், கதை எழுதுதல், கட்டுரை எழுதுதல் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டியில் அகில இந்திய அளவில் அறிவிக்கப்பட்ட 160 விருதுகளில்,

தமிழகத்தைச் சார்ந்த 23 மாணவ, மாணவியர்கள் மற்றும் பாண்டிச்சேரியை சார்ந்த 2 மாணவிகள், என மொத்தம் 25 மாணவ, மாணவியர்கள் கலை பண்பாட்டுத் துறையின் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் வாயிலாக தேசிய பாலஸ்ரீ விருதுகளை பெற்றுள்ளனர். இவ்விருது பெற்ற 25 மாணாக்கர்களில், 3 மாற்றுத்திறனாளி மாணவர்கள் மற்றும் 3 அரசுப் பள்ளி மாணவர்கள் இடம் பெற்றுள்ளனர் என்பது சிறப்பிற்குரியது.

மத்திய அரசின் தேசிய பாலஸ்ரீ விருதுடன் ரூ.15,000/–க்கான கிஸான் விகாஸ் பத்திரங்கள், சான்றிதழ்கள் மற்றும் புத்தகங்கள் பெற்று, தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த 25 விருதாளர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று, தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்டுத் தொகையான ரூ.15,000/–க்கான காசோலைகள், பாராட்டுச் சான்றிழ்கள் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என். நடராஜன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க பாண்டியராஜன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப., தொல்லியல் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் டாக்டர் சு. பிரபாகர், இ.ஆ.ப., சுற்றுலாத் துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண் இயக்குநர் திரு.டி.பி. ராஜேஷ், இ.ஆ.ப. கலை பண்பாட்டுத் துறை ஆணையர் திருமதி வ. கலையரசி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**